08.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கொடைக்கானலில் மழை

கொடைக்கானலில் கடந்த சில தினங்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. செவ்வாய்க்கிழமை பிற்பகலில் சுமார் அரை மணி நேரம் மழை பெய்தது. தொடர்ந்து அவ்வப்போது பெய்யும் மழையால் நீரோடைகளில் தண்ணீர் வரத்து தொடங்கியுள்ளது.

### சூரம்பட்டி அணைக்கட்டில் தண்ணீர் வெளியேற்றம்; வண்டல் மண்ணை அகற்றுவது குறித்து நாளை முடிவு

சூரம்பட்டி அணைக்கட்டில் தேங்கிக் கிடந்த தண்ணீர் முழுவதும் வெளியேற்றப்பட்டது. இதைத்தொடர்ந்து அணையில் தேங்கிக் கிடக்கும் வண்டல் மண்ணை வெளியேற்றுவது தொடர்பாக வியாழக்கிழமை (ஜூன் 9) இறுதி முடிவு எடுக்கப்பட இருப்பதாக பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈரோடு சூரம்பட்டி அணைக்கட்டுப் பகுதியில் இருந்து செல்லும் பெரும்பள்ளம் வாய்க்கால் மூலமாக 2,500 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்று வந்தன. கடந்த 20 ஆண்டுகளாக இந்த வாய்க்காலின் இரு கரையையும் ஆக்கிரமித்து 500-க்கும் மேற்பட்டவர்கள் வீடுகளைக் கட்டி குடியிருந்து வந்தனர்.

இதனால், கிட்டதட்ட 20 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தப் பாசனத் திட்டம் முடங்கிக் கிடந்தது. வாய்க்கால் ஓரத்தில், சென்னிமலை சாலை, முத்துக்கவுண்டன்பாளையம், லக்காபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வாய்க்கால் கரையில் கட்டப்பட்டிருந்த 570 வீடுகளை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்பேரில் பொதுப் பணித் துறையினர் கடந்த மார்ச் மாதம் இடித்து அகற்றினர்.

இந்நிலையில், ஈரோடு சூரம்பட்டி அணைக்கட்டின் மொத்த பரப்பளவில் தற்போது 6 ஏக்கர் நிலம் மாயமாகி இருப்பதாக விவசாயிகள் குற்றஞ்சாட்டி வந்தனர். 6 ஏக்கர் பரப்பளவில் 300 வீடுகள் கட்டப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி அணையில் தண்ணீர் தேக்கினால் மட்டுமே பெரும்பள்ளம் வாய்க்காலில் உள்ள 2,500 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் என்றும் வலியுறுத்தி வந்தனர்.

இதைத்தொடர்ந்து, விவசாயிகள் தொடர்ந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், சூரம்பட்டி அணைக்கட்டுப் பகுதியைச் சுற்றி உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து, முதல்கட்டமாக அணைக்கட்டில் தேங்கி இருந்த தண்ணீரை பொதுப் பணித் துறையினர் பெரும்பள்ளம் வாய்க்கால் வழியாக வெளியேற்றினர்.

வெளியேறிய தண்ணீர் வாய்க்காலில் தேங்கி நிற்கிறது. இதில் இருக்கும் ஏராளமான மீன்களைப் பொதுமக்கள் ஆர்வமாகப் பிடித்து வருகின்றனர். இப்போது அணையில் இருந்து நீர் முழுவதும் வெளியேறிய நிலையில், ஆகாயத் தாமரையும், வண்டல் மண் மட்டுமே தேங்கிக் கிடக்கிறது. இந்த வண்டல் மண் டன் கணக்கில் குவிந்து கிடப்பதால் இதை எப்படி அகற்றுவது என்பது தொடர்பாக விவசாயிகள், பொதுப் பணித் துறை அதிகாரிகள் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து, தமிழக விவசாயிகள் சங்க ஈரோடு மாவட்டச் செயலாளர் சுப்பு கூறியதாவது:

அணைக்கட்டில் 4,000 லோடுகளுக்கு மேல் வண்டல் மண் தேங்கிக் கிடக்கிறது. இதை இலவசமாக எடுத்துச் செல்ல அனுமதித்தால் விவசாயிகள் உடனடியாக கொண்டு சென்றுவிடுவார்கள். ஆனால், அதிகாரிகள்தான் இறுதி முடிவு எடுக்க வேண்டும்.

இதுகுறித்து, இறுதி முடிவை எடுக்கும் வகையில் மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர், முன்னாள் அமைச்சர் கே.வி.இராமலிங்கம் ஆகியோர் தலைமையில் ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை (ஜூன் 9) ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் இறுதி முடிவு எட்டப்படும் என்றார்.

## கொப்பரை நேரடி கொள்முதல் நிலையங்கள் அமைக்க 8 இடங்கள் தேர்வு

கொப்பரை நேரடி கொள்முதல் நிலையங்கள் அமைக்க மாவட்டத்தில் எட்டு இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

கொப்பரை கொள்முதல் மையங்கள் அமைப்பது தொடர்பான ஆய்வுக் கூட்டம் திருப்பூர் மாவட்ட ஆட்சியரகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் ச.ஜெயந்தி தலைமை வகித்தார். கூட்டத்தில், தென்னை விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்க வேளாண்மைத் துறையினருக்கும், கொள்முதல் நிலையங்கள் அமைக்க கூட்டுறவுத் துறையினருக்கும் நேரடி அறிவுரை வழங்கப்பட்டது.

அரசின் நேரடி கொள்முதல் நிலையங்களில் கொப்பரை கொள்முதல் செய்ய விவசாயிகளுக்குத் தென்னை விவசாய அட்டை தேவைப்படுவதால், இந்த அடையாள அட்டையைப் பெற தங்கள் பகுதியில் உள்ள வேளாண் விரிவாக்க மையத்தை தென்னை விவசாயிகள் அணுகலாம். மேலும், தற்போது அரசு நிர்ணயித்துள்ள விலையான அரவை கொப்பரை ஒரு கிலோ ரூ.59.50-க்கும், பந்து கொப்பரை ஒரு கிலோ ரூ.62.40-க்கும் கொள்முதல் செய்யப்படும்.திருப்பூர் மாவட்டத்தில் உடுமலை, மொடக்குப்பட்டி, பெதப்பம்பட்டி, பல்லடம், வாவிபாளையம், பொங்கலூர், அவிநாசி, தாராபுரம், ஆகிய எட்டு இடங்கள் கொப்பரை நேரடி கொள்முதல் நிலையங்கள் அமைக்கத் தேர்வு செய்யப்பட்டன.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பிரசன்ன ராமசாமி, இணைப் பதிவாளர் குமார், வேளாண்மை இணை இயக்குநர் ரெங்கநாதன், வேளாண்மை உதவி இயக்குநர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## நாமகிரிப்பேட்டையில் ரூ.45 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்

ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் நாமகிரிப்பேட்டை ஏல மையத்தில் செவ்வாய்க்கிழமை நடந்த மஞ்சள் ஏலத்தில் ரூ.45 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம் போனது.

நாமகிரிப்பேட்டை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், வாரம்தோறும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடக்கிறது. செவ்வாய்க்கிழமை நடந்த ஏலத்துக்கு விரலி 700 மூட்டை, உருண்டை ரகம் 240 மூட்டை, பனங்காளி 30 மூட்டை என மொத்தம் 970 மஞ்சள் மூட்டைகள் வந்தன.

இதில், ஒரு குவிண்டால் விரலி ரூ.7 ஆயிரத்து 469 முதல் ரூ.11 ஆயிரத்து 569 வரையும், உருண்டை ரகம் ரூ.6 ஆயிரத்து 130 முதல் ரூ.9 ஆயிரத்து 139 வரையும், பனங்காளி ரகம் ரூ.13 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரத்து 512 வரையும் ஏலம் போனது.

மொத்தம் 970 மஞ்சள் மூட்டைகள், ரூ.45 லட்சத்துக்கு ஏலம் போயின.

## பொறையாறில் மழை

பொறையாறு சுற்றுவட்டாரப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை பலத்த மழை பெய்தது.

பொறையாறு, தரங்கம்பாடி, திருக்கடையூர், தில்லையாடி, காட்டுச்சேரி, சங்கரன்பந்தல் உள்ளிட்டப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை பிற்பகலில் பலத்த காற்றுடன் மழை பெய்தது.

இடி மின்னலுடன் பெய்த மழையால் அப்பகுதியில் மழைநீர் பெருக்கெடுத்தது. நகரில் வெப்பம் தணிந்து குளிர்ந்தக் காற்று வீசியது.

## குவிண்டால் பருத்தி ரூ. 4,923-க்கு விற்பனை

நாகை மாவட்டம், மயிலாடுதுறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஒரு குவிண்டால் பருத்தி ரூ. 4,923 என்ற விலையில் விற்பனையானது.

இதுகுறித்து நாகை விற்பனைக் குழுச் செயலாளர் ரா. தேவேந்திரன் தெரிவித்திருப்பது:

நாகை மாவட்டம், மயிலாடுதுறை, சீர்காழி, செம்பனார்கோவில், குத்தாலம் ஆகிய பகுதிகளில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் ஜூன் 6-ஆம் தேதி முதல் பருத்தி ஏலம் தொடங்கப்பட்டுள்ளது. வாரம் ஒரு முறை இந்த ஏலம் நடைபெறுகிறது.

திங்கள்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில், மயிலாடுதுறை விற்பனை கூடத்தில் ஒரு குவிண்டால் பருத்தி ரூ. 4,923 என்ற விலைக்கும், செம்பனார்கோவிலில் ஒரு குவிண்டால் பருத்தி ரூ. 4,869 என்ற விலைக்கும் விற்பனையானது. எனவே, பருத்தி சாகுபடி விவசாயிகள், தங்கள் பருத்தியை ஒழுங்குமுறை விற்பனை

கூடங்களுக்குக் கொண்டு வந்து, உரிய விலைக்கு ஏலத்தில் விற்பனை செய்து பயனடையலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

## தேனி மண்டலத்துக்கு 1,200 டன் சன்னரக அரிசி

நீடாமங்கலத்திலிருந்து தேனி மண்டலத்துக்கு 1,200 டன் சன்னரக அரிசி பொது விநியோகத் திட்டத்துக்காக செவ்வாய்க்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு, சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை ஆகியவற்றிலிருந்து 100 லாரிகளில் 1,200 டன் சன்னரக அரிசி நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு செவ்வாய்க்கிழமை கொண்டுவரப்பட்டது.

நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் முன்னிலையில், சுமார் 80 சுமைதூக்கும் தொழிலாளர்கள் அரிசி மூட்டைகளை சரக்கு ரயிலின் 21 பெட்டிகளில் ஏற்றினர். இதைத் தொடர்ந்து, அரிசி மூட்டைகள் பொது விநியோகத் திட்டத்துக்காக தேனி மண்டலத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பருத்தி குவிண்டால் ரூ. 5,039 விற்பனை

திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில், பருத்தி குவிண்டால் அதிகபட்சமாக ரூ. 5,039-க்கு விற்பனையானது.

திருவாரூர் மாவட்டத்தில் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு பருத்தி விதைகள் விதைக்கப்பட்டு, தற்போது பஞ்சுகள் அறுவடை செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் 5,192 ஹெக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் அறுவடை செய்த பருத்தி பஞ்சுகளை விற்பனை செய்து தர ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மறைமுக ஏலம் விடப்படுவது வழக்கம். அதன்படி, மாவட்டத்தில் திருவாரூர், குடவாசல், வலங்கைமான் ஆகிய இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகள் பருத்தி பஞ்சுகளை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

நிகழாண்டு, முதல் ஏலமாக திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு செவ்வாய்க்கிழமை ஊட்டியாணி, சேந்தங்குடி, கங்களாஞ்சேரி, கல்லிக்குடி, பழையவலம், மழையூர், சித்தாநல்லூர், எட்டியலூர், பிளாக்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து விவசாயிகள் 184 லாட்டுகளில் (மூட்டை) பஞ்சுகளை ஏலத்துக்கு வைத்திருந்தனர்.

பஞ்சுகளை செம்பனார்கோயில், சேலம் கொங்கனாபுரம், திருப்பூர், விழுப்புரம், கும்பகோணம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வந்திருந்த வியாபாரிகள் தாங்கள் கேட்கும் தொகையை ஏலச் சீட்டில் எழுதி ஏலப்பெட்டியில் போட்டிருந்தனர். இதையடுத்து, மாலை வேளாண் விற்பனைக் குழுத் துணை இயக்குநர் எம். மனோகரன், செயலர் சேரலாதன், கண்காணிப்பாளர் ரமணி ஆகியோர் ஏலப்பெட்டியை திறந்து வியாபாரிகள் கேட்ட விலையை படித்தனர்.

இதில் அதிகபட்சமாக பருத்தி குவிண்டாலுக்கு ரூ. 5,039 விலையும், குறைந்தபட்சமாக ரூ. 4,569 விலையும் கேட்கப்பட்டிருந்தது. சராசரியாக பருத்தி குவிண்டால் ரூ. 4,869-க்கு விற்பனையானது. முதல் நாளில் சுமார் 350 குவிண்டால் பருத்தி விற்பனையானது. இதையடுத்து, புதன்கிழமை (ஜூன் 8) வலங்கைமானில் பருத்தி ஏலம் நடைபெறவுள்ளது.

**களியக்காவிளை வட்டாரத்தில் மழை**

களியக்காவிளை, மார்த்தாண்டம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை பலத்த மழை கொட்டியது.

கேரளத்தில் பருவமழை விரைவில் தொடங்க உள்ள நிலையில், குமரி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் செவ்வாய்க்கிழமை பரவலாக மழை பெய்தது.

களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதிகளான குளப்புறம், செங்கவிளை, படந்தாலுமூடு, அதங்கோடு, மடிச்சல், குழித்துறை, மார்த்தாண்டம், ஞாறான்விளை, திக்குறிச்சி ஆகிய பகுதிகளில் காலை முதல் விட்டுவிட்டு மழை பெய்து கொண்டிருந்தது. தொடர்ந்து பிற்பகல் 2.30 மணிக்கு மேல் பலத்த மழையாக கொட்டித் தீர்த்ததுடன், இரவிலும் வெகுநேரம் மழை நீடித்தது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### கேரளாவின் சிரபுஞ்சி

பருவ மழையால் கேரளா முழுவதுமே பயன்பெறுகிறது. எனினும் மிகவும் அதிகமழை பெறும் இடமாக எர்ணாகுளம் மாவட்டத்தில் உள்ள நேரியமங்கலம் கிராமம் உள்ளது. பெரியார் நதிக்கரையில் இந்தக் கிராமம் உள்ளது.எர்ணாகுளம், இடுக்கி மாவட்டங்களின் எல்லையில் உள்ள இந்தக் கிராமம் அதிக மழையினால் கேரளாவின் சிரபுஞ்சி என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது. பெரியாறைக் கடக்க நேரியமங்கலத்தில் கட்டப்பட்ட ஆர்ச் வடிவிலான பாலம் தென்னிந்தியாவின் முதல் ஆர்ச் பாலம் என்ற சிறப்பைப் பெற்றுள்ளது. 'மூணாறின் நுழைவுவாயில்' என இதனை அழைப்பர்.

### இமாம்பசந்த் தரும்... இனிப்பான் லாபம்...



பல ரகங்களை கொண்ட மாங்கனிகளில் இமாம்பசந்த், சேலம் பெங்களூரா, மல்லிகா, பங்கனப்பள்ளி, காதர் (அல்போன்சா வகையை சார்ந்தது) ரகங்கள் முக்கிய இடம் பிடிக்கின்றன.

திண்டுக்கல் மாவட்டம்- சிலுவத்தூர் ரோட்டில் உள்ள கம்பிளியம்பட்டியில், இவ் வகை பழங்களை இயற்கை முறையில் சாகுபடி செய்து வருகிறார் விவசாயி துரைபாண்டியன்.

இயற்கை விவசாயத்தில் அலாதி பிரியம் கொண்ட இவர், 12 ஆண்டு களாக 24 ஏக்கர் நிலத்தை பண்படுத்தி மாமரங்களுக்கு ஏற்ற நீர்தேங்கும் கரைகளை (15 அல்லது 20 மரங்களை அடக்கிய மண்ணாலான பாத்திகள்) கட்டியுள்ளார். இதனால் மழைநீர் வெளியில் செல்லாமல் தடுக்கப்படுவதுடன், மண்ணின் சத்துக்கள் அங்கேயே தேங்கி நின்று பலன் தருகின்றன. ஒவ்வொரு மரத்திற்கும் கிடைக்க வேண்டிய இயற்கையான நீர்ச்சத்து, நுண்ணூட்ட சத்து, இலை தழைகள் மூலம் கிடைக்கும் பசுந்தாழ் இயற்கை உரங்கள் மரங்களுக்கு கிடைக்கிறது. 'இமாம்பசந்த்' ரக மா மரங்கள் 16 ஏக்கரில் 800 மரங்கள், மீதி 8 ஏக்கரில் சேலம் பெங்களூரா 150 மரங்கள், மல்லிகா 50 மரங்கள், பங்கனப்பள்ளி 50 மரங்கள், காதர் (அல்போன்சா சிறப்பு வகை) 50 மரங்கள் நடப்பட்டுள்ளன. இந்தாண்டு சீசனில் 8 டன் இமாம்பசந்த் மாம்பழங்கள் கிடைத்துள்ளன. முழுக்க முழுக்க இயற்கை முறையில் விளைந்ததால் மாம்பழ பிரியர்களிடம் அமோக வரவேற்பை பெற்றுள்ளது. தற்போதைய விலை கிலோ ரூ.120.

துரைபாண்டியன் கூறியதாவது: இமாம்பசந்த் மரக்கன்றுகளை 2 அடிக்கு 2 அடி அளவில் நட்டு, மூன்றாண்டு பராமரித்தேன். பின் மற்ற ரகங்கள் (1,100 கன்றுகள்) ரூ.1.75 லட்சத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து நடவு செய்தேன். துளிர்விட்ட களைகளை அந்தந்த மரங்களின் அடியிலேயே உழுது உரமாக்கினேன். ஐந்து ஆண்டுகள் கழித்து 20 மரங்களுக்கு நடுவில் கரை கட்டி பராமரித்தேன். இதனால் மழைநீர் மரத்திற்கு சேர்ந்தது. கரை கட்டிய பின் மரங்களின் வளர்ச்சியில் மிகப்பெரிய மாற்றம் வந்தது. 12வது ஆண்டு முடிவில் அனைத்து மரங்களும் மிக அதிகளவில் காய்த்தது.

இயற்கை முறை வளர்ப்பு என்பதால், பூஞ்சை தாக்குதல் இருந்தது. அதனால் கோவை வேளாண் பல்கலை பரிந்துரைத்த இயற்கை நுண்ணுயிர் கரைசல்

தெளித்தோம். இதனால் பூஞ்சை குறைந்து மரங்களின் அடர்த்தி அதிகமானது. கடந்த 3 ஆண்டுகளில் தட்பவெப்ப நிலை சரியில்லை என்றாலும், விளைச்சல் சீராகவே இருந்தது. 16 ஏக்கரில் 8 டன் இமாம்பசந்த் கிடைத்துள்ளது. அடுத்தடுத்த ஆண்டுகளில் தொடர் விளைச்சல் இருக்கும். இதனால் செலவு போக ரூ.50 ஆயிரம் கிடைத்தது என்றார். தொடர்புக்கு 98421 51615.

**- வீ.ஜெ.சுரேஷ், திண்டுக்கல்.**

## மிளகாய் நட்டு பார்க்கலாம் துட்டு



காய்கறிகளில் நிலைத்த வரவு பெற மிளகாய் சாகுபடி செய்யலாம். வடிகால் வசதியுள்ள வண்டல் மண் அல்லது களிமண்ணும், மணலும் கலந்த இரு மண்பாடு வகை (மண்ணில் கார அமிலத்தன்மை 6.5 முதல் 7.5 வரை) ஏற்றது. கோவில்பட்டி, பாலூார், பெரியகுளம் வகைகள் தவிர யு.எஸ்.635, இந்திரா, பிரியங்கா, சுப்ரியா என்.எஸ்.230, 237, 110 மற்றும் 1701 போன்ற ரகங்கள் மகசூல் தரவல்லவை. ஒரு எக்டேருக்கு 200 கிராம் விதைகள் வாங்கி நாமே குழித்தட்டு முறையில் நாற்றுகள் தயாரிக்கலாம்.

ஒரு எக்டேருக்கு 2,300 நாற்றுகள் தேவை. டிரைக்கோடெர்மா விதை 4 கிராம் அல்லது சூடாமோனாஸ் 10 கிராம் விதை நேர்த்தி செய்ய ஒரு கிலோ விதையுடன் கலந்து நாற்றுக்களை நிழல் வலை நாற்றங்கால் மூலம் உற்பத்தி செய்தால் நல்லது. 35 முதல் 40 நாள் வரை வயதுடைய ஆரோக்கியமான நாற்றுகளை இரு வரிசை

நடவு முறையில் 90 செ.மீ., 60 செ.மீ., 60 செ.மீ., என்ற இடைவெளியில் நட்டு ஒரு வாரம் கழித்து 'பாகு வாசி' முறையில் கன்று நடவு செய்ய வேண்டும். நான்கு அடி அகலம் உடைய மேட்டுப்பாத்தியில் நட்டால் நன்கு வளரும். ஒரு அடி இடைவெளி விட்டு மேட்டுபாத்தி அமைக்கல் அவசியம். சொட்டு நீர்ப்பாசனம் பக்கவாட்டு இணை குழாய்களை நான்கு அடி மேட்டுப்பாத்தியின் மையத்தில் இருக்குமாறு அமைத்து நீர்ப்பாய்ச்சவும், முதல் பாசனத்திற்கு மண் நனைய மண்ணின் தன்மையை பொறுத்து 8-12 மணி நேரம் ஆகும். பாசன அமைப்புக்கு ஏற்ப 30 மைக்ரான் பாலிதீன் சீட் போர்த்தி ஓட்டை இட்டு நாற்றுகளை 40 நாள் வயதுள்ளவைகளை ஊன்ற வேண்டும். நடவு செய்தது முதல் தினமும் ஒரு மணி நேரம் நீர் நிர்வாகம் தேவை. நடவு செய்த முன்றாம் நாள் முதல் மூன்று நாட்கள் இடைவெளியில் கரையும் உரப்பாசனம் தேவை. ஒரு எக்டேருக்கு தழைச்சத்து 120 கிலோ, மணிச்சத்து 20 கிலோ, சாம்பல் சத்து 80 கிலோ தேவை. இதற்கு கடைசி உழவின்போது அடிஉரமாக எக்டேருக்கு 375 கிலோ சூப்பர் பாஸ்பேட் இட்டு மண்ணை தயார் செய்ய வேண்டும். நட்ட 11ம் நாள் முதல் 40 நாள் வரை 10 முறை உரம் செலுத்த வேண்டும். வேளாண் அலுவலர்கள் உதவியுடன் மிளகாய் நடவு செய்ய நல்ல லாபம் கிடைக்கும்.

**- பா.இளங்கோவன், விவசாய ஆலோசகர், கோவை, 98420 07125**

## வனத்துறை உதவியுடன் தோப்புக்காடுகள்



இந்தியாவின் தேசிய வனக்கொள்கைப்படி வனம் அல்லது பசுமைப் போர்வை பரப்பு மொத்த நிலப்பரப்பில் 33 சதவிகிதம் இருத்தல் வேண்டும். ஆனால் தமிழ்நாட்டில் 22 சதவிகிதம் மட்டுமே உள்ளது. இன்னும் 11 சதவிகிதம் தமிழ்நாட்டு நிலப்பரப்பில் மரங்களை நட வேண்டும். எனவே வனவியல் விரிவாக்கக் கோட்டம் என்ற பெயரில் பட்டா நிலங்களிலும், தரிசு, புறம்போக்கு, சாலை ஓரம், பள்ளி, கல்லூரி, தனியார் மற்றும் அரசு அலுவலக வளாகங்களில் மரங்கள் நட்டு வளர்க்க, மாவட்ட தலை நகரங்களிலும் ஒரு கன்று உற்பத்தி, விதை விற்பனை மற்றும் ஆலோசனை மையங்களை நிறுவவும், மரக்கன்றுகள் உற்பத்தி செய்யவும் உதவுகின்றனர்.

மரக்கன்று வளர்க்கும் தொழில் நுட்பத்தை பலருக்கு கற்றுத் தருகின்றனர். மரங்கள் நடுவது எளிது. அதை வளர்க்க தொடர்ந்து தண்ணீர் ஊற்ற வேண்டும். விதை சேகரம், நேர்த்தி, நாற்றங்கால் பராமரிப்பு, மண்ணின் குணங்கள், ஆய்வு, உயிர் உரங்கள், நோய், பூச்சி மேலாண்மை, கடி மரங்களின் கிளைகளை லாவகமாக வெட்டுதல் என பல தொழில் நுட்பங்களை மரம் வளர்ப்போர் அறிந்து கொண்டால் இந்திய வனக்கொள்கை 1988 சட்டம் உறுதியாக நடைமுறைக்கு வந்து விடும்.

மரம் வளர்க்க வேண்டும் என கருதும் மக்கள், சிறு, குறு விவசாயிகள், கன்று விதை ஆலோசனை பெற மாவட்ட வன விரிவாக்க அலுவலகங்களை அணுகலாம் அல்லது 'தலைமை அலுவலகம், வன விரிவாக்கக் கோட்டம், வனத்துறை, பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை - 15' அல்லது தொலைபேசி 044 2434 8059 ல் தொடர்பு கொள்ளலாம். **- எம்.ஞானசேகர், விவசாய ஆலோசகர், சென்னை. 93807 55629**

**மழையால் சாகுபடி பணிகள் தீவிரம்! விவசாயிகள் சுறுசுறுப்பு**

தியாகதுருகம்: தியாகதுருகம் பகுதியில் பெய்த மழையால், விளைநிலங்களை உழுது களைகளை நீக்கும் பணியில், விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

வடகிழக்கு பருவமழை கடந்த ஆண்டு போதிய அளவு பெய்ததால் தியாகதுருகம் பகுதியில் விவசாயம் செழித்தது. நீர்நிலைகள் நிரம்பியதால் நிலத்தடி நீர்மட்டம் குறையாமல் கிணற்று நீர் பாசனமும் கை கொடுத்தது. இதனால் விவசாயிகள் கூடுதல் பலனடைந்தனர். இந்நிலையில் கோடை வெயில் அதிகரித்த போதும் மே மாத துவக்கத்தில் இருந்தே, அவ்வப்போது மழை பெய்ததால் வெப்பம் தணிந்தது.

கடந்த ஒரு வாரமாக தியாகதுருகம் பகுதியில் இரவு நேரங்களில் பரவலாக மழை பெய்தது. இதனால் மண்ணின் ஈரம் அதிகரித்தது. இச்சூழலை பயன்படுத்தி விளைநிலங்களை உழுது சீர்படுத்தும் பணியை விவசாயிகள் துவக்கினர்.

இதன் காரணமாக வயலில் முளைத்திருந்த களைகள் வேரோடு அகற்றப்பட்டு, மீண்டும் வளராமல் தடுக்கப்படுவதால், விதைப்புக்கு பின்னர் பயிர்கள் செழித்து வளர்ந்து பலன் கொடுக்கிறது.

இதனால் டிராக்டர் களை கொண்டு நிலத்தை உழும் பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## திருச்சியில் பூக்கள் விலை எகிறியது ஒரு கிலோ கனகாம்பரம் ரூ.600

திருச்சி : திருச்சியில் பூ விலை நேற்று பல மடங்கு உயர்ந்தது. ஒரு கிலோ கனகாம்பரம் ரூ.600க்கு விற்கப்பட்டது. திருச்சி காந்திமார்க்கெட் மற்றும் ' ரங்கம் பூ மார்க்கெட்டுக்கு வயலூார், சோமரசம் பேட்டை, கோப்பு, குழுமணி, மணப்பாறை, வாத்தலை, குணசீலம், சென்னகரை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தினமும் டன் கணக்கில் பூ கொண்டு வரப்படுகிறது. இதே போல் திருவாரூர், நாகை, தஞ்சை, விழுப்புரம், விருத்தாசலம் உள்ளிட்ட பகுதிகளுக்கு இவை விற்பனைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

பூ வரத்து குறைவு, முகூர்த்த தினம் என்பதால் திருச்சியில் நேற்றும் பூ விலை உயர்ந்தது. கிலோ ரூ.30க்கு விற்ற மல்லிகை ரூ.200க்கும், ரூ.250க்கு விற்ற கனகாம்பரம் ரூ.600க்கும், ரூ.50 க்கு விற்ற சம்பங்கி ரூ.250க்கும், ரூ.80க்கு விற்ற முல்லை ரூ.240க்கும், ரூ.50 க்கு விற்ற கோழிக் கொண்டை ரூ.80க்கும், ரூ.120க்கு விற்ற விருட்சி ரூ.140க்கும், ரூ.80க்கு விற்ற ரெட்ரோஸ் ரூ.1600க்கும், ரூ.200க்கு விற்ற மாலை இதழ் ரோஸ் ரூ.220க்கும் விற்கப்பட்டது.

## கரூரில் தக்காளி விலை எகிறியது

கரூர் : 2 மாதத்தில் தக்காளி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கிலோ ரூ.70க்கு விற்பனையாகிறது. கரூர் மாவட்டத்தில் வடகிழக்குபருவ மழை சீசனில் நல்ல மழைபெய்தது. இதனால் தக்காளி உள்ளிட்ட நாட்டுக்காய்கறிகளை விவசாயிகள்அதிக அளவில் பயிரிட்டனர். தக்காளி முள்ளங்கி நல்ல விளைச்சல் ஏற்பட்டது. மேலும் ஓசூர் அருகே உள்ள ராயக்கோட்டை தக்காளி மார்க்கெட்டில் இருந்து வரத்து மிகவும் அதிகமாக வந்தது.

உள்ளூரில்அதிக விளைச்சல், வரத்து அதிகம் காரணமாக தக்காளி விலை கடுமையாக வீழ்ச்சியடைந்து கடந்த மார்ச் மாதத்தில் உழவர்சந்தைகளில் கிலோ ரூ6க்கு விற்பனையானது. பொதுமக்கள் குறைந்தவிலையில் கிடைப்பதால் மகிழ்ச்சியடைந்தாலும் விவசாயிகள் போதுமான விலைகிடைக்காமல் கவலையில் இருந்தனர். தற்போது தக்காளி விளைச்சல் குறைவின் காரணமாக விலையும் கடுமையாக உயர்ந்து விட்டது. இரண்டு மாதத்திற்கு முன்னர் கிலோ ரூ.6க்கு விற்பனையான தக்காளி இப்போது கிலோ ரூ.70 ஆகிவிட்டது.
இதனால் ஓட்டல்கள், மெஸ்களில் உணவில் தக்காளி இல்லை. புளி கரைசல்தான் சேர்க்கப்படுகிறது. திருமணம் விருந்து போன்றவற்கு உணவு தயாரிக்கும் போதும் குறைந்த அளவே தக்காளி பயன்படுத்தப்படுகிறது. நல்ல விலை கிடைக்கும் இந்த நேரத்தில் தக்காளி சீசன் இல்லாததால் விளைச்சல் இல்லை என விவசாயிகள் தெரிவித்தனர்.

**புதுகை மாவட்டத்தில் நேற்று மழை**

புதுக்கோட்டை, : புதுகை மாவட்டத்தில் நேற்று 26.40 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. அதிகபட்சமாக புதுகையில் 20 மி.மீட்டரும், குறைந்தபட்சம் திருமயத்தில் 1.40 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. புதுகையில் கடந்த சில நாட்களாக வெயில் குறைந்து அவ்போது வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. சில நேரங்களில் லேசான மழை பெய்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் வானம் கருமேகங்களால் சூழ்ந்து மழை வருவதற்கான அறிகுறி தென்பட்டது.

இதையடுத்து சுமார் அரை மணி நேரத்திற்கு கனமழை பெய்யதது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுதது ஓடியது. புதுகையில் அதிகபட்சமாக நேற்று 20 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இதேபோல் திருமயத்தில் குறைந்தபட்சமாக 1.40 மிமீ, மழையூரில் 5 மிமீ மழை பதிவாகியுள்ளது.

## குவின்டால் பருத்தி ரூ.4,923க்கு விற்பனை

நாகை : நாகை மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை நிலையங்களில் நேற்றுமுன்தினம் நடந்த பருத்தி ஏலத்தில், குவிண்டாலுக்கு அதிகபட்ச விலையாக மயிலாடுதுறை விற்பனை கூடத்தில் ரூ.4,923, செம்பனார்கோவிலில் ரூ.4,869க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஏலத்தில் உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் கலந்து கொண்டனர். மேலும் விவசாயிகள் தங்கள் பருத்தியை தரம் பிரித்து சுத்தம் செய்து நன்கு உலர்த்தி சணல் சாக்குகளில் கொண்டு வந்து அதிக விலைக்கு விற்று பயன்பெறும்படி நாகை விற்பனைக்குழு செயலாளர் தேவேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## இறவையில் கம்பு பயிரிடுவது எப்படி? வேளாண்துறை ஆலோசனை

பழநி, : இறவையில் கம்பு பயிரிடுவது குறித்து வேளாண்துறை சார்பில் ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது.

இறவையில் கம்பு பயிரிடுவதற்கு கோ-7, கோ (சியு) 9, ஐசிஎம்வி-221, ராஜ்-171, எக்ஸ்-7 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். ஹெக்டேருக்கு 3.75 கிலோ விதை இட வேண்டும். ஹெக்டேருக்கு 7.5 சென்டில் நாற்றாங்கால் அமைக்க வேண்டும். 3*1.5மீ அளவு கொண்ட 6 படுக்கைகளை 1 சென்டில் அமைத்து அரை மீட்டர் கால்வாய் அரை அடி ஆழத்தில் ஒவ்வொரு படுக்கையை சுற்றியும் அமைக்க வேண்டும்.

ஹெக்டருக்கு 750 கிலோ தொழுஉரம் இட வேண்டும். தேன் ஒழுகல் நோய் பாதித்த விதைகளை நீக்க 10 லிட்டர் நீரில் 1 கிலோ உப்பினை கரைத்து விதைகளை அதில் கொட்டி மிதக்கும் விதைகளை நீக்கி, நல்ல தண்ணீர் கொண்டு 3 அல்லது 4 முறை கழுவி நிழலில் உலர்த்த வேண்டும். தண்டு ஈ மற்றும் தண்டு துளைப்பான் நோய் பாதிப்பை தடுக்க வேளாண் அதிகாரிகளை ஆலோசித்து விதை முலாம் பூச வேண்டும். அடிச்சாம்பால் நோய் தாக்குதலில் இருந்து தப்பிக்க

மெட்டலாக்சில் 6 கிராமுடன், 5 மில்லி தண்ணீர் சேர்த்து, 1 கிலோ விதையுடன் கலக்க வேண்டும்.

600 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியாவுடன் 1 ஹெக்டேருக்கு உண்டான விதையை கலந்து உயிர் உரமாக விதைக்க வேண்டும். விரல்களால் 1 சென்டிமீட்டர் ஆழத்திற்கு கோடுகள் இட்டு, ஒரு படுகைக்கு அரை கிலோ விதையினை தூவி மண்ணில் மூட வேண்டும். மிதைல் பாரதியான் மருந்தினை விதைத்தவுடன் தூவி எறும்புகளில் இருந்து பாதுகாக்கலாம்.

நாற்றுக்களை தண்டு ஈயிலிருந்து காப்பதற்கு கார்போபியூரான் 3ஜி 600 கிராம் அல்லது போரேட் 10ஜி-180கிராம் தூவி இட வேண்டும். 30 சென்டிமீட்டர் கால்வாய் மூலம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். மண்ணில் நீர் உறிஞ்சும் வரை மட்டுமே நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

வேளாண் அலுவலர்களின் அறிவுரையின் படி 45*15 சென்டிமீட்டர் இடைவெளியில், 3 முதல் 5 சென்டிமீட்டர் ஆழத்தில் பார்களின் பக்கவாட்டில் வேர்களை 40 லிட்டர் நீரில் 1000 கிராம் அசோஸ்பைரில்லம் கலந்த கலவையில் 30 நிமிடம் நனைத்து அதன்பின் நட வேண்டும். ரகங்களுக்கும், வீரிய ஒட்டு ரகங்களுக்கும் அதற்கேற்ற அளவுகளில் உரமிட வேண்டும். இதுதொடர்பான கூடுதலான விபரங்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ, வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அணுகலாமென வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.